விலைவாசி கடும் உயர்வு! அதிக விலை கொடுத்து மின் கொள்முதல்! ஆட்சி நிர்வாகம் பற்றி அடிப்படை கூட அறியாத

முன்யோசனையில்லா மூடர் கூட்டத்திடம் சிக்கிச் சீரழியும் தமிழ்நாடு!

தலைவர் மு.க.ஸ்டாலின் வேதனை!

சென்னை, அக்.15 –

த.வெ.க. ஆட்சி அமைந்த இந்த நான்கே மாதங்களில் கடும் விலைவாசி உயர்வி லும், பணவீக்கத்திலும் தமிழ்நாடு முதலி டம் எனவும், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு கழக ஆட்சியில் குறைந்த விலைக்கு வாங்கிய ஒப்பந்தங்களை ரத்து செய்துவிட்டு அதிக விலை கொடுத்து மின் கொள்முதல் செய்வதுதான் இந்த ஆட்சி யில் மாற்றமா? எனவும், ஆட்சி நிர்வாகத்தின் அடிப்படை கூட அறியாத இந்த அறிவிலிகளின் அலட்சியத்தால் எதிர் வரும் மாதங்களை மக்கள் எப்படி எதிர் கொள்ளப்போகிறார்கள் என்றும், முன் யோசனையும், மூளையும் இல்லாத, மூடர் கூட்டத்திடம் தமிழ்நாடு சிக்கி விட்டது என் றும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் வேதனை தெரிவித்துள்ளார்.

அப்பதிவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியிருப்ப தாவது:-

த.வெ.க. ஆட்சி அமைந்த நான்கே மாதங்களில் தமிழ்நாடு முதலிடம்! எதில் தெரியுமா? பணவீக்கத்திலும் விலைவாசி உயர்விலும்!

மின்வெட்டு குறித்து எச்சரித்தும் நடவடிக்கை இல்லை!

இவர்களுக்கு, அத்தியாவசியப் பொருட் களின் விலையைக் கட்டுக்குள் வைக்கத் தெரியவில்லை என்றால் கூட பரவா யில்லை. விலைவாசி உயர்வே ஏற்பட வில்லை என உணவுத்துறை அமைச்சர் சொல்லும் வடிகட்டிய பொய்யைக் கேட்டுத் தான் ஏழை மக்கள் இன்னும் எரிச்சலில் இருக்கிறார்கள்.

மின்வெட்டு குறித்தும் அனைத்து எதிர்க் கட்சிகளும் கடந்த பல மாதங்களாக எச்ச ரித்து வந்தோம். அப்போதே



சுதாரித்து உரிய நடவடிக்கைகளை எடுத்தி ருக்க வேண்டும்.


எந்த மாநிலமும் வாங்காத அதிக விலையில் மின்கொள்முதல்தான் மாற்றமா?

மின்துறை அமைச்சர் பஞ்சாபைக் போகிறார்களாம். கழக ஆட்சியில் குறைந்த விலைக்கு வாங்கிய ஒப்பந்த தங்களை இரத்து செய்துவிட்டு, இந்தி யாவிலேயே இதுவரை எந்த மாநில மும் வாங்காத அதிக விலைக்கு வாங்குவதுதான் இவர்கள் கொண்டு வந்துள்ள மாற்றமா?

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை பர்சேஸ் செய்ய மின் கொள்முதல் ஊழலா?

இது யார் வீட்டுக் காசு சார்? அ.தி. மு.க.வில் இருந்து மேலும் 15 பேரை purchase செய்யப் போகிறோம் என்று வேறு வெட்கமே இல்லாமல் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறீர்களே? அதற்குப் பணம் போதாமல்தான் மின்சாரம் வாங்குவதில் ஊழல் நடக் கிறதா என மக்கள் மனதிலும் கேள்வி கள் எழத் தொடங்கிவிட்டன.

குறுவை பொய்த்த நிலையில், டெல்டா விவசாயிகளின் பேச்சைக் கேட்காமல், ஜோசியரின் பேச்சைக் கேட்டு மேட்டூர் அணையையும் தவ றான தேதியில் திறந்து வைத்தார்கள். 5 கோடி ரூபாய் செலவில் சாலையோரத் தடுப் புகள் அமைத்து CM ரீல்ஸ் எடுத்ததைத் தவிர அதனால் விளைந்த பயன் என்ன?





TNPDCL buys electricity for up to ₹37/unit; costliest purchase ever

TIMES NEWS NETWORK

Chennai: Tamil Nadu Power Distribution Corporation (TNPDCL) has signed agreements to procure the costliest power the discom has ever purchased, at ₹37 per unit, to overcome the gap between supply and demand for Oct. The highest price the power utility has ever paid for electricity was ₹24 per unit in 2022.

The state power utility has finalised deals for 1,500 megawatts (MW) of round-the-clock power supply from Oct 12 to 31 at rates of ₹31.99 to ₹34.49 per unit.

The power, with a quantum of 2,000MW, to be procured to meet the evening surge in demand from 6pm to midnight will cost between ₹33.37 and ₹37 per unit.

No other state has signed agreements at this cost through the Union Power Ministry's e-bidding portal, DEEP, though many state-owned and private discoms have floated tenders and have not finalised deals. Andhra Pradesh Power Coordination Committee (APPCC) alone has finalized deals for 150MW at prices ranging from ₹16 to ₹20 for the same period. However, APPCC finalised the bids for Oct requirements on Sept 9 itself, while TNPDCL invited bids for the period of Oct 12 to 31 just a week ago.

TNPDCL officials said they had to float the tenders on such short notice because they thought power demand would dip after Oct 10. "However, since the weather forecast is not clear on when the northeast monsoon will set in, we anticipate the unprecedented demand to continue in the coming days and floated the short-term tenders," the official said.

TNPDCL has cited a shortage of nearly 4,000MW from central generating stations due to mandatory scheduled annual maintenance, along with reduced wind power generation, as reasons for the power purchase, while power demand has been unprecedented in the month of Oct.

While the peak power demand hovered around 17,000MW in Oct last year and overall daily consumption was around 365 million units (MU), the peak demand continues to touch 20,000MW and while daily consumption is nearly 70MU more compared to last year.

Meanwhile, another TNPDCL official pointed out that the company signed such high-cost power agreements because all the tied-up suppliers are gas-based plants rather than conventional coal plants. "Coal power is not available in the market. But the positive point is that we can pay only for the power purchased, not for the entire signed quantum. The fixed charges are less than ₹1, so if demand comes down and we don't need power from gas-based plants, we just pay the fixed charges. In coal-based plants, the fixed cost would be higher," added the official.

குரங்குக் கூட்டம் வனத்தைக் கொளுத்தி விடுவதுபோல் அமைச்சரவை!

முதலமைச்சரோ மாதம் ஒரு ஊருக்குச் சென்று விழாக் கொண்டாட்டம்!

காட்ட, முதலமைச்சரோ இலண்டன் பறந் துவிட்டார். இப்போது, கடைசி நிமிடத்தில் கதவைத் தட்டி, யூனிட்டுக்கு 35 ரூபாய் கொடுத்து வெளிச்சந்தையில் வாங்கப் இப்போது சம்பா சாகுபடியும் சாத்தியமா குமா எனத் தெரியாமல் கடைமடை விவ சாயிகள் நீரின்றிப் பரிதவிக்கிறார்கள்.

இப்படி, முன்யோசனையும் இல்லாத மூளையும் இல்லாத ஒரு மூடர் கூட்டத்திடம் சிக்கி, நம் கண்முன்னே தமிழ்நாடு சீர ழிந்து கொண்டிருக்கிறது. வாலில் தீப்பற்றிய குரங்குக் கூட்டம் வனமெல்லாம் தாவி, கொளுத்தி விடுவதைப் போலத்தான் த.வெ.க. அரசின் அமைச்சரவை அமைந் திருக்கிறது.

இவர்களை வழிநடத்த வேண்டிய முத லமைச்சரோ, உடுப்பி, இலண்டன், விஜய வாடா என மாதம் ஒரு ஊருக்குச் சென்று விழாவைச் சிறப்பிப்பதிலேயே குறியாக இருக்கிறார்.

அறிவிலிகளின் கூட்டத்தை நாளும் மக்கள் எப்படி எதிர்கொள்வார்களோ?

மொத்தத்தில், ஆட்சி நிர்வாகத்தின் அடிப் படை கூட அறியாத இந்த அறிவிலிகளின் அலட்சியத்தாலும் அழிச்சாட்டியத்தாலும் எதிர்வரும் மாதங்களைத் தமிழ்நாட்டு மக் கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறார்கள் என்ற அச்சம்தான் மேலோங்குகிறது.

Collectionகுமாரு

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

குறைந்த விலை; கழக அரசின் டெண்டர்களை ரத்து செய்துவிட்டு, 1 யூனிட் மின்சாரத்தை ரூ.35-க்கு வாங்குவதில் மாபெரும் ஊழல்!

அதிக விலைக்கு மின்சாரம் வாங்கும் ஊழல் 'டீல்' முடிக்கத்தான் பக்கத்து மாநிலத்திற்குப் பறந்து இருக்கிறாரா 'பஞ்ச்' டயலாக் CM!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் குற்றச்சாட்டு!

சென்னை, அக்.15 -

"தமிழ்நாட்டில் செயற்கை மின் தட்டுப்பாட்டை உருவாக்கி, ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.35-க்கு வாங் கும் 'ஊழல் டீல்' முடிக்கத்தான் பக் கத்து மாநிலத்துக்குப் பறந்து இருக்கி றாரா 'பஞ்ச்' டயலாக் சி.எம்?" என, வலைதளப் பதிவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலை வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

கழக ஆட்சிக்காலத்தில் குறைந்த விலைக்கு மின்சாரம் வாங்கியதை முறைகேடு என்று சொல்லி டென் டரை ரத்து செய்த இந்த சர்க்கஸ் அரசு, இன்றைக்கு 1 யூனிட் மின்சா ரத்தை மிக மிக அதிக விலைக்கு ரூ.35 கொடுத்து வாங்க இருக்கிறது.

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இப்படி அதிக விலைக்கு மின்சாரம் வாங்குகிறது என்றால், அந்த அள



விற்கு நிர்வாகத்திறனில் திறமையற் றவர்களாக இருக்கிறார் இந்த 'டம்மி' முதலமைச்சர்.

இப்படி கொள்ளை அடிக்கத் தான், 'காற்று அடிக்கவில்லை மழை வரவில்லை பஞ்சாப்ல கூட இதே மாதிரி ஒரு சம்பவம் நடந்துச்சு' என் றெல்லாம் கட்டுக்கதைகளைச் சொல்லி இத்தனை நாட்களாக இந்த ஆட்சியாளர்கள் செயற்கை மின் தட் டுப்பாட்டை உருவாக்கினார்களா?

இந்த ஊழல் 'டீல்' முடிக்கத்தான் பக்கத்து மாநிலத்துக்கு பறந்து இருக் கிறாரா பஞ்ச் டயலாக் சி.எம்?

ஏற்கனவே மின் கட்டணம் என்கிற பெயரில் மக்களிடம் பகல் கொள்ளை அடிக்கும் இந்த வெட்கங்கெட்ட சர்க் கார், அதிக விலைக்கு மின் கொள்மு தல் செய்து அதையும் பொதுமக்கள் தலையில் கட்டப் போவதை ஒரு போதும் ஏற்க முடியாது. விலைவாசி உயர்வில் இந்தியாவிலேயே தமிழ் நாட்டை முதலி டத்திற்கு கொண்டு போய் நிறுத்தியுள்ள இந்தக் கோமா லிக்கூட்டம், இன்னும் எத்தனை தூரம் மக்களை வதைக்கவிருக்கிறது.

மாற்றம் மாற்றம் என்று சொல்லி, நாட்டின் நம்பர் 1 டுபாக்கூராக மாறி நிற்கும் இந்த முதலமைச்சருக்கு மக் கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

Collection குமாரு

இவ்வாறு அப்பதிவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.

போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்ட நிலையில்

ஐந்தர் மந்தரில் நுழைய முயன்ற கரப்பான்பூச்சி கட்சி நிர்வாகிகள் கைது!

டெல்லியில் மீண்டும் பரபரப்பு!

புதுடெல்லி, அக். 15–


டெல்லி ஐந்தர் மந்தர் பகுதி யில் போராட்டம் நடத்துவதற்கான அதிகாரம் நேற்று ரத்து செய்யப் பட்ட நிலையில், தடையை மீறிப் போராட்டத்தில் ஈடுபட முயன்ற கரப்பான் பூச்சி ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

ஐந்தர் மந்தரில் போராடுவதற் கான தகுதியை நீக்கி, உள்துறை அமைச்சகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் காவல்துறை நேற்று அறிவிப்பு வெளியிட்டிருந் தது. அத்துடன் அப்பகுதி முழுவ தும் பேரிகார்டுகள் அமைக்கப் பட்டு, சாலைகளும் முற்றிலுமாக மூடப்பட்டி ருந்தன.

இந்நிலையில், தடையை மீறி இன்று ஐந்தர் மந்தர் பகுதியில் போராட்டம் நடத்த கரப்பான் பூச்சி ஜனதா கட்சியைச் சேர்ந்த அஜிங்க்யா ஷிண்டே, சௌரவ் தாஸ், அஷுதோஷ் ரங்கா மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் முயன்றனர். அவர்கள் அருகில் உள்ள மெட்ரோ நிலைய வளாகத் தின் வழியாக கேட் ஏறி குதித்து, ஐந்தர் மந்தர் பகுதிக்குள் நுழைந்து தேசியக் கொடியை ஏந்தி போராட் டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, அங்கு பாது காப்பு பணியில் ஈடுபட்டிருந்த டெல்லி போலீசார் அவர்கள் அனைவரையும் அதிரடியாக கைது செய்து அழைத்துச் சென்ற னர். இதற்கிடையே, ரங்கா மற்றும் தாஸ் ஆகியோர் தங்களது எக்ஸ் தளப் பக்கத்தில் இது தொடர்பான பதிவுகளையும், வீடியோக்களை யும் வெளியிட்டுள்ளனர். இந்த சம் பவத்தால் டெல்லி ஐந்தர் மந்தர் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற் பட்டது.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; தி.மு.க. சார்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லாம 'வழ வழா... கொழ கொழா' என்பது போல பதில் சொல்லி இருக்கிறாரே மாணிக்கம் தாக்கூர்...! த.வெ.க. பத்தி கேட்டதுக்கு கப்சிப்ன்னு இருக்காரே!

போண்டி : **ஆமாய்யா; நீ சொல்றது சரிதான் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இருக்கும்போதே, த.வெ.க.வுடன் கள்ள உறவில் இருந்தவர்களில் அவரும் ஒருவர் ஆச்சே... அவராவது... த.வெ.க.விடம் கேள்வி கேட்பதாவது.**

நெல்லை மத்திய மாவட்ட செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

நெல்லை, அக். 15 –

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.. மாவட்ட செயற்குழு கூட் டம், 16.10.2026 வெள்ளிக்கிழமை மாலை ,5.00 மணியளவில், வண் ணாரப்பேட்டை, நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில், நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் V.K. முருகன் தலைமையில் நடைபெற இருக் கிறது.

தலைமைக் கழக பிரதிநிதிகள் சட்டமன்ற உறுப்பினர் வை.முத்து ராஜா, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் S.ஜோயல் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்க ளாக கலந்து கொள்கிறார்கள்.

சிறப்புமிக்க இக்கூட்டத்தில் நெல்லை மத்திய மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற் குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக செய லாளர்கள், ஒன்றிய கழக செயலா ளர்கள், பேரூர் கழக செயலாளர் கள் ஆகியோர் அவசியம் தவறாது கலந்து கொள்ள கேட்டுக்கொள் கிறேன்.

பொருள்: 22.08.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத் தில், கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட



தீர்மானத்தின்படி கழக மறு சீரமைப்பு குறித்து ஆலோசனை.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.